இளையோர்களுக்கான கோவிட்-19 தடுப்பூசிகள்

இளையோர்களுக்காக சேவை செய்யும் சமூகம்-சார்ந்த நிறுவனங்களுக்கான ஒப்புதல் உடன்படிக்கை

Vaccinate WA
CovidVaccineWA.org

கோவிட்-19 தடுப்பூசிகள் இப்போது 5 முதல் 17 வயதுள்ள இளையோர்களுக்குக் கிடைக்கின்றன. வாஷிங்டன் மாகாண சட்டத்தின் கீழ் பல வகையான ஒப்புதல்கள் சட்டப்பூர்வமாக இருந்தாலும், இளையோர்களுக்கு தடுப்பூசிகளை வழங்க பெற்றோர்/பாதுகாவலரின் ஒப்புதல் பெரும்பாலான தடுப்பூசி வழங்குநர்களுக்குத் தேவைப்படுகிறது. மகாணச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படும் அனைத்து வகையான ஒப்புதல்களையும், உங்கள் நிறுவனம் இளையோர்களுக்கு (குறிப்பாக வீட்டு வசதி இல்லாத இளையோர்கள்) கோவிட்-19 தடுப்பூசி போடுவதற்கு எவ்வாறு உதவ முடியும் என்பதையும் இது ஆவணப்படுத்துகிறது.

இளையோர்களுக்காக ஒப்புதல் வழங்கக்கூடிய பெரியவர்கள்:

- பெற்றோர்
- பாதுகாவலர் அல்லது சட்டபூர்வமான பாதுகாவலர்
- வீட்டிலிருந்து விலகி வசிக்கும் குழந்தைக்கான மருத்துவ பராமரிப்பை அளிக்கும் ஒரு வளர்ப்பு பெற்றோர் அல்லது ஒப்புதல் அளிக்க நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பிற நபர் (அத்தியாயம் 13.32A அல்லது 13.34 Revised Code of Washington (RCW, வாஷிங்டன் மறுசீரமைக்கப்பட்ட குறியீடு))
- அவர்களுக்கான உடல்நலம் சார்ந்த முடிவுகளை எடுக்க கையொப்ப அங்கீகாரம் பெற்ற ஒரு நபர்
- அவர்களின் உடல்நலப் பராமரிப்பு பொறுப்பை நிர்வகிக்கும் உறவினர்
- பள்ளி செவிலியர், ஆலோசகர் அல்லது வீடற்றவரின் தொடர்பாளர் (ஃபெடரல் McKinney-Vento Homeless Education Act இன் கீழ் வீடற்றவர் என வரையறுக்கப்பட்ட இளைஞர்களுக்கானது)*

பின்வரும் சூழ்நிலையில் இளையோர்கள் தங்களுக்கான ஒப்புதலை அளிக்கலாம்:

- **சட்டப்பூர்வமாக சுயாதீனமாக வாழ்பவர்கள்.** 16 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர் மற்றும் பெற்றோரிடமிருந்து சட்டப்பூர்வமாக பிரிந்து சுயாதீனமாக வாழ்பவர்.
- **சுயாதீனமான சிறார் அல்லது வயது வந்தவரை திருமணம் செய்து கொண்டவர்கள்.**
- **வழங்குநர் அவர்களை ஒரு முதிர்ச்சியுற்ற சிறார் என்று** Mature Minor Doctrine (முதிர்ச்சியுற்ற சிறார் கொள்கை) இன் கீழ் தீர்மானிக்கிறார்.**

*McKinney-Vento இன் மூலம் ஒப்புதல் பற்றிய கூடுதல் தகவல்கள்:

மாகாணச் சட்டத்தின் கீழ், பள்ளி செவிலியர்கள், பள்ளி ஆலோசகர்கள் மற்றும் வீடற்ற மாணவர்களின் தொடர்பாளர்கள் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பாதுகாப்பில் இல்லாத வீடற்றவர்களுக்கு இளையோர்கள் அல்லது வயது வந்தவர்களுக்கான (ஃபெடரல் McKinney-Vento homeless education act இன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது – ஆங்கிலத்தில் மட்டும்) தடுப்பூசிகளுக்கு ஒப்புதல் அளிக்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஆதாரவளத்திற்கான இணைப்பு: National Center for Homeless Education, *வீடற்ற நிலையில் உள்ள ஆதரவற்ற மாணவர்களின் கல்வியை ஆதரித்தல்,* https://nche.ed.gov/wp-content/uploads /2018/10/youth.pdf - ஆங்கிலத்தில் மட்டும்

**Mature Minor Doctrine பற்றிய கூடுதல் தகவல்கள்:

மருத்துவச் செயல்முறையின் விளைவுகளைப் புரிந்துகொண்ட அல்லது மதிப்பறிந்து கொண்ட சிறார்களுக்கு,“Mature Minor Doctrine” கீழ் சரியான ஒப்புதல் அளிக்க சில வழங்குநர்கள் அனுமதிக்கின்றனர்.

நோயாளி முதிர்ச்சியுற்ற சிறாரா என்பதைத் தீர்மானிப்பதில், வழங்குநர்கள் சிறாரின் வயது, புத்திசாலித்தனம், முதிர்ச்சி, பயிற்சி, அனுபவம், பொருளாதார சுதந்திரம் அல்லது அதன் குறைபாடு, வயது வந்தோருக்கான பொதுவான நடத்தை மற்றும் பெற்றோரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபடுதல் ஆகியவற்றை மதிப்பீடு செய்வார்கள்.

வெவ்வேறு வழிமுறைகளில் ஒப்புதலை வழங்குநர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

- வாய்மொழி ஒப்புதல் (தொலைபேசி மூலம் அல்லது நேரடியாக)
- எழுத்துப்பூர்வ ஒப்புதல் (ஒரு படிவம்)
- சிலருக்கு எழுத்துப்பூர்வ மற்றும் வாய்மொழி ஒப்புதல் என இரண்டுமே தேவைப்படுகிறது.
- வயது வந்தவரின் நேரடியான ஒப்புதல் அவர்களுக்கான ஒப்புதலை அளிக்கிறது.

இளையோர்களுக்கு தடுப்பூசி போடுவதற்கு எவ்வாறு உதவுவது

□ **Vaccine Locator (தடுப்பூசி இருப்பிடக் கண்டருவி) (https://vaccinelocator.doh.wa.gov/?language=ta) இல் உள்ள வடிகட்டுதல் விருப்பங்களைப் பயன்படுத்தவும் அல்லது எந்த வகையான ஒப்புதலை வழங்குநர் ஏற்றுக்கொள்கிறார் என்பதற்கு வழங்குநரை அழைக்கவும்.** Vaccine Locator இல் உள்ள இளையோர்களுக்கான உகந்த வடிகட்டுதல் விருப்பங்கள் இளையோர்கள் எந்தவிதமான ஒப்புதல்களை வழங்கலாம் என்பதைக் கண்டறிய உங்களுக்கும், இளையோர்களுக்கும் உதவும். தடுப்பூசி பெற்றுக்கொள்ளும் முன்பதிவுகளுக்குத் தயாராவதற்கான உதவிக்குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள "இளையோர்கள் அவர்கள் அளிக்க வேண்டிய ஒப்புதலுக்குத் தயாராக உதவுங்கள்" என்பதைப் பார்க்கவும்.

□ **நேரடியான அனுமதிகளை ஏற்கும் தடுப்பூசி மையங்களைத் தேடவும் அல்லது தடுப்பூசி பெற்றுக்கொள்ளும் முன்பதிவுகளுக்கு தொலைபேசியில் அழைக்கவும்.** பல வழங்குநர்கள் இணையவாயிலான சந்திப்பைச் செய்ய பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஒப்புதலைக் கேட்கிறார்கள்.

□ **தடுப்பூசி போட்டுக்கொள்ள சென்று வருவதற்கான போக்குவரத்து வசதி.** உங்களுக்கு போக்குவரத்து வசதி இல்லாவிட்டால், உங்கள் உள்ளூர் சுகாதார அதிகார வரம்புகள் அல்லது Department of Health (DOH, சுகாதார துறை) இன் கோவிட்-19 தடுப்பூசி போக்குவரத்து ஆதாரவளங்கள் என்பதைப் பாருங்கள் – ஆங்கிலத்தில் மட்டும். (இணைப்பு: https://www.doh.wa.gov/Portals/1/Documents/1600/coronavirus/820-151-COVID19VaccineTransportationResources.pdf)

□ **ஒப்புதல் பெறுவதற்காக பள்ளிகளுடன் தொடர்பை ஏற்படுத்தவும்** நீங்கள் McKinney-Ventoக்கான அளவுகோல்களுடன் பொருந்தும் பணிபுரியும் இளையோர்களாக இருந்தால் (மேலும் தகவலுக்கு முன்பக்கத்தைப் பார்க்கவும்) ஒப்புதலைப் பெறுவதற்காக பள்ளி செவிலியர், பள்ளி ஆலோசகர் அல்லது வீடற்ற மாணவர் தொடர்பாளர்கள் ஆகியோருடன் இணைந்து பணியாற்றலாம். தடுப்பூசி பெறுவதற்கு ஒரு பெரியவர் உடனிருக்க வேண்டும் என்று சில வழங்குநர்கள் கோருகின்றனர். தடுப்பூசி போடும் போது மாணவர்கள் யாருடன் செல்ல வேண்டும் என்பதை தீர்மானம் செய்வதற்கு முன்கூட்டியே பள்ளி ஊழியர்களுடன் கலந்துரையாடி உறுதிப்படுத்தி கொள்ளவும் அல்லது ஒருங்கிணைத்து கொள்ளவும்.

□ **நீங்களே ஒரு நடமாடும் தடுப்பூசி நிகழ்வை நடத்துங்கள் அல்லது ஏற்கனவே உள்ள சிகிச்சையகத்திற்கு இளைஞர்களை வழிநடத்துங்கள்.**

  ▫ நீங்களே நடத்தும் நிகழ்வைப் பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, COVID-19 Vaccine Resource Guide (கோவிட்-19 தடுப்பூசி ஆதாரவள வழிகாட்டி) சமூகம் தலைமையிலான தடுப்பூசிபோடும் முயற்சிகளை ஆதரித்தல் ஸ்பானிஷ் (PDF) **என்பதைப் பார்க்கவும்.** (**ஆங்கில இணைப்பு**: https://www.doh.wa.gov/Portals/1/Documents/1600/coronavirus/VACCSSupportCommunity-ledVaccinationEfforts.pdf)(**ஸ்பானிஷ் இணைப்பு**: Guía de recursos sobre la vacuna contra la COVID-19 para apoyar las iniciativas de vacunación dirigidas por la comunidad (wa.gov))

  ▫ ஒரு Care-A-Van நிகழ்வைக் கோருங்கள் – ஆங்கிலத்தில் மட்டும். WA State Department of Health Care-A-Van(doh.wa.gov/CareAVan) மூலம் உங்களுக்கு தடுப்பூசிகளைக் கொண்டு வர முடியும். தகுதியான நிகழ்ச்சி நடத்தும் சமூக நிறுவனங்களுக்கு நிதி வசதி கிடைக்கிறது. Care-A-Van, முதிர்ச்சியுற்ற சிறார்களின் ஒப்புதல் உட்பட, ஆவணத்தின் முன்புறத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள அனைத்து வகையான ஒப்புதலையும் ஏற்றுக்கொள்கிறது.

□ **இளையோர்கள் அளிக்க வேண்டிய ஒப்புதலின் வகைக்கு தயாராவதற்கு அவர்களுக்கு உதவுங்கள்:**

  ▫ இளையோர்கள் தடுப்பூசி போடும்போது ஒரு வயது வந்தவர் இருக்க வேண்டும் எனும் பட்சத்தில், அவர்களை ஒருங்கிணைக்கவும்.

  ▫ வழங்குநர் எழுத்துப்பூர்வ ஒப்புதலை ஏற்றுக்கொண்டால், படிவத்தை அச்சிட்டு கையொப்பமிட இளையோர்களுக்கு உதவுங்கள்.

  ▫ அவர்கள் சுயாதீனமாக வாழும் சிறார் அல்லது வயது வந்தோரை திருமணம் செய்து கொண்ட சிறாராக இருக்கும் பட்சத்தில் தகுந்த ஆவணங்களை சேகரிக்க அவர்களுக்கு உதவுங்கள்.

  ▫ அவர்கள் McKinney-Vento இன் மூலம் ஒப்புதல் பெறுகிறார்கள் என்றால், **தகவலறிந்த ஒப்புதல் சட்டத்தின் நகலைக் கொண்டு வாருங்கள்**: RCW 7.70.065- **ஆங்கிலத்தில் மட்டும்**மற்றும் பள்ளிகளுக்கு உரிய பகுதியை முன்னிலைப்படுத்தவும். (சட்டத்திற்கான இணைப்பு: https://app.leg.wa.gov/RCW/default.aspx?cite=7.70.065)

  ▫ Mature Minor Doctrine மூலம் அவர்கள் சம்மதிக்க விரும்பினால், அவர்கள் பெற்றோரிடமிருந்து சுயாதீனமாக இருப்பதைக் காட்டும் ஆவணங்கள் மற்றும் தகவல்களைத் தயாரிக்க அவர்களுக்கு உதவுங்கள். இது அனைத்து வழங்குநர்களுக்கும் தேவையில்லை, ஆனால் உதவக்கூடும். சில வழங்குநர்கள் முதிர்ச்சியுற்றவரா அல்லது சிறாரா எனும் தீர்மானங்களை தளத்தில் முடிவெடுப்பதில்லை ஆனால் முந்தைய வழங்குநர்களின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்கிறார்கள்.

Washington State Department of Health

DOH 825-017 December 2021 Tamil

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோர, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.govக்கு மின்னஞ்சல் அனுப்பவும்.